**<u>சார்பு நீதிமன்றம், திருமங்கலம்</u>**

முன்னிலை – திரு.ஜி.பிரபாகரன், பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, திருமங்கலம்.

2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25–ம் தேதி வியாழக்கிழமை

**<u>அசல் வழக்கு எண்: 306/2019 (CNR.No.TNMD1D0007172019)</u>**

சசிக்குமார் ... வாதி

//எதிராக//

1) இராமர் என்ற இராமன் (இறப்பு)
2) இலட்சுமி
3) சசிக்குமார்
4) முருகன்
5) முருகேஸ்வரி ... பிரதிவாதிகள்

[As per order passed in I.A No.02/2023, dated 30.03.2023, the plaint is amended]

இவ்வழக்கானது, என் முன்பாக கடந்த 16.09.2025–ம் தேதியன்று, இறுதி விசாரணைக்காக வந்தபொழுது, வாதிக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஜி. அடைக்கலம் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் எக்ஸ்பார்ட்டி செய்யப் பட்டும், வழக்குரை மற்றும் வாதி தரப்பு சாட்சியங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>:–**

வாதியால் இவ்வழக்கானது, வாதி, வழக்குரை ஈடுகடன் கூடுதல் தொகை ரூ.4,08,600/–ஐயும், அதற்கு ஆண்டிற்கு 24%, பின்வட்டியையும் மற்றும் செலவுத் தொகையையும், பிரதிவாதிகளிடமிருந்து வசூல் செய்ய ஏதுவாக, அடமானத் திற்குண்டான முதல்நிலைத்தீர்ப்பாணை பிறப்புவிக்கக்கோரியும் மற்றும் செலவுத் தொகை கோரியும், பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**2) வழக்குரைச்சுருக்கம்:**

வாதியிடம், கடந்த 09.10.2017–ம் தேதியில், முதலாவது பிரதவாதி, அவரது அவசர குடும்பச்செலவிற்காக கடனாக ரொக்கம் ரூ.2,70,000/– பெற்றுக்கொண்டு, அதற்கு, ஆண்டு ஒன்றுக்கு, 24% வட்டி சேர்த்து, செலுத்துவதாக ஒப்புக்கொண்டு அதற்கு, ஆதரவாக அன்றே, வழக்குரைச்சொத்தைப்பொறுத்து, ஓர் ஈடுகடன் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி ஈடுகடன் பத்திரத்தின் காலம் இரண்டு ஆண்டாகும். அப்பால், வாதி, மேற்படி ஈடுகடன் பத்திரத்திற்குண்டான தொகை வகையறாக்களை, முதலாவது பிரதிவாதியிடம் பலமுறை துயர்ந்தும், அவர், யாதொரு தொகையையும் செலுத்தாததால், வாதியால், இவ்வழக்கானது மேலேக்கூறிய பரிகாரம் கோரி, முதலாவது பிரதிவாதியின் மீது தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்தபொழுது அவர் கடந்த 01.02.2021–ம் தேதியில், இதர பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்துபோய்விட்டதால், அவர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

**3)** பிரதிவாதிகள் எக்ஸ்பார்ட்டி செய்யப்பட்டிருக்கிறார்கள். இருப்பினும், வாதியின் வழக்கினை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு அவருக்கே இருந்ததால், சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அதனடிப்படையில், வாதி தரப்பில் இரண்டு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, ஒரு சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது.

**4) தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:**

வாதி தாக்கல் செய்திருக்கும் இவ்வழக்கானது, அனுமதிக்கப்பட வேண்டிய ஒன்றா? அல்லது இல்லையா?

5) <u>பிரச்சனைக்குரிய தீர்வு:</u>

வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாதி தாக்கல் செய்திருக்கும், இவ்வழக்கானது அனுமதிக்கப்பட வேண்டிய ஒன்றா? என்பது குறித்து பார்க்கும் பொழுது, வாதி, அவரை வா.சா.1– ஆக விசாரணை செய்து கொண்டிருக்கிறார். வா.சா.1– வாதி, அவரது வழக்குரையில் கண்ட சங்கதிகளை அனுசரித்தே சாட்சியமளித்திருக்கிறார். ஈடுகடன் பத்திரத்தில் சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிற நபர் வா.சா.2– ஆக விசாரணை செய்யப்பட்டிருக்கிறார்.

6) வா.சா.ஆ.1– ஈடுகடன் பத்திரத்தை உற்றுநோக்கியபொழுது, அதில், வாதியிடம் கடந்த 09.10.2017–ம் தேதியில், முதலாவது பிரதிவாதி, கடனாக ரூ.2,70,000/– பெற்றுக்கொண்டு, அதற்கு மாதம் ஒன்றுக்கு, ரூ.100/–க்கு, ரூ.2/–வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு, அதை எழுதிக்கொடுத்துள்ளார் என்று அறிய முடிகிறது. இருந்தும், பிரதிவாதிகள், இந்நீதிமன்றத்தில் ஆஜராகி, எவ்விதமான சாட்சியமும் முன்னிறுத்தாத சூழ்நிலையில், வாதி, முதல்நிலைத்தீர்ப்பாணை பரிகாரம் பெற அருகர் என்று, இந்நீதிமன்றம் முடிவு செய்து, அவ்வாறே, இந்த எழுவினாவிற்கு, வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக, வாதிக்கு, வழக்குரை ஈடுகடன் கூடுதல் தொகை ரூ.4,08,600/– ஐயும், அசல் ரூ.2,70,000/–த்திற்கு, இவ்வழக்கு தாக்கல் செய்த தேதி முதல், தொகை வசூலாகும் தேதி வரை ரூ.100/–க்கு, மாதம் ஒன்றுக்கு 00.50 பைசா வீதம் வட்டியும், இரண்டு முதல் ஐந்து பிரதிவாதிகள், எதிர்வரும் 30.10.2025–ம் தேதியோ அல்லது அதற்கு முன்பாகவோ செலுத்தவேண்டுமென்று, அடமானத்திற்குண்டான, முதல் நிலைத்தீர்ப்பாணை பிறப்புவித்து வாதியின் இவ்வழக்கானது, அவரது செலவுத் தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. தவறும்பட்சத்தில், வாதி, அடமானத் திற்குண்டான இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்புவிக்கக்கோரி மனுத்தாக்கல் செய்யவும் அனுமதியளித்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப் பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25–ம் தேதி, திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRABAKARAN Digitally signed by PRABAKARAN Date: 2025.09.25 17:04:31 +0530

சார்பு நீதிபதி,
திருமங்கலம்.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:–</u>**

வா.சா.1 – திரு.சசிக்குமார் (வாதி)
வா.சா.2 –திரு.இராஜாராம்

**<u>வாதி தரப்பு சான்றாவணம்:–</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 09.10.2017 | வாதிக்கு, முதலாவது பிரதிவாதி எழுதிக்கொடுத்துள்ள ஈடுகடன் பத்திரத்தின் அசல். |

PRABAKARAN Digitally signed by PRABAKARAN Date: 2025.09.25 17:04:36 +0530

சார்பு நீதிபதி,
திருமங்கலம்.